**தலைப்பு 332 – தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு – 332 – தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 22 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 218.76 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 183.37 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 35.39 மில்லியன் அதாவது 16.2 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 96.56 | 93.66 | 2.90 | 3.0 |
| மூலதனம் | 122.20 | 89.71 | 32.49 | 26.6 |
| **மொத்தம்** | **218.76** | **183.37** | **35.39** | **16.2** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 33201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 1.00 | 0.99 | 0.20 | 1.57 | 4.0 | 3.47 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 04 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் மொத்த தொகை ரூபா 81.63 மில்லியன் மொத்த தொகையாகும். கீழே விபரங்கள் தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன்கள் |
| 6000/0000/00/0013/0127/000 | 76.18 |
| 6000/0000/00/0016/0117/000 | 5.38 |
| 6000/0000/00/0018/0112/000 | 0.06 |
| 6000/0000/00/0020/0020/000 | 0.01 |
| **மொத்தம்** | **81.63** |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | காணிகள், நிலையான சொத்துப் பதிவேடு, உபகரணம் மற்றும் மென்பொருள் | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மோட்டார் வாகனங்களிற்கான புத்தகம் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 1645 | நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இருப்பு பதிவேடு | நிதிப்பிரமாணம் 454 | நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 700,000 மொத்த தேறிய நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 04 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 23 சதவீதம் தொடக்கம் மற்றும் 72 சதவீதமான வரையான வீச்சினைக் கொண்டிருந்தன.

#### 3.2.2 ஒதுக்கீட்டுக் கணக்கிலுள்ள பொறுப்புக்களினை குறைத்துக் காட்டல்

டியீஎஸ்ஏ 08 படிவத்தின் (1) இன் கீழ் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்களில் ரூபா 11,085 பொறுப்புக்கள் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ் அறிக்கை 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| | ரூபா. | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| XXIV அத்தியாயத்தின் 13.5 ஆம் பிரிவு | 21,250 | பண்டிகை முற்பணமானது 10 தவணைக்கட்டணங்களிலோ அல்லது முன்னதாகவோ அறவிடவேண்டியிருந்த போதிலும், அதற்கேற்ப நடைபெற்றிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| நிதிப்பிரமாணம் 1646 | | ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்கள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், இது அதற்கேற்ப சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை** | | |
| 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | | எரிபொருள் நுகர்விற்காக பரீட்சிப்பானது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **(ஈ) பொது நிதிச் சுற்றறிக்கைகள்** | | |
| 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | 96,000 | கட்டுநிதிகள் எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கம் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் முற்பணங்கள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களிலிருந்தது. |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---------------------------------------------

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 09 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 307 | 147 | 160 |
| (iii) | இரண்டாம் நிலை | 61 | 30 | 31 |
| (iv) | ஆரம்ப நிலை | 70 | 25 | 45 |
| | **மொத்தம்** | **462** | **211** | **251** |

திணைக்களமானது மீளாய்வாண்டின் இறுதியளவில் 251 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.